**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ம் நாள் திங்கட்கிழமை

**IA NO.118/2020**

**In**

**O.S No.3/2019**

அண்ணாமலை ........**மனுதாரர்/1-ம் பிரதிவாதி**

**//எதிர்//**

1. ராஜாங்கம்,

2. செல்வம், .......**எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

3. மாரிமுத்துகோனார் .......**3-ம் எதிர்மனுதாரர்/2-ம்பிரதிவாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.லோகநாதன், பி.எஸ்சி.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கந்தசாமி, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 3-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.யோகாம்பாள், பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம்:-</u>**

இம்மனுவானது மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு மனுதாரர் மீதும், மாரிமுத்துகோனார் என்பவர் மீதும் நிரந்தர தடையாணை மற்றும் செயலுறுத்துக்கட்டளைக்காக வாதிகள்/1, 2 எதிர்மனுதாரர்களான அவரது மகன்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுச் சொத்து புலஎண்.9/1 விஸ்தீர்ணம் 0.27.0 செண்ட்

இடம் ஆதியில் காளி மகன் நடேசன் என்பவருக்கு சொந்தமாகும் என்றும், அதனை மனுதாரர் கொத்தனார் வேலை பார்த்து அதில் வந்த வரும்படிகளை சேர்த்து மேற்படி நடேசன் என்பவரிடமிருந்து கடந்த 04.05.1990-ம் தேதியன்று சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.117/1990-ன் படிக்கு தகுந்த பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று அடைந்து அனுபவித்து வருகிறார் என்றும், மனுதாரர் மனு சொத்தை கிரையம் பெற்றபோது அவரது மகன்களான 1-வது எதிர்மனுதாரருக்கும், 2-வது எதிர்மனுதாரருக்கும் முறையே 8 மற்றும் 5 வயதுகள் மட்டுமே பூர்த்தியாகி இருந்தது என்றும், தனக்கு எந்தவித பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களும் கிடையாது என்றும், மனுசொத்து தனது தனித்த சுய வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சுயார்ஜீதமான சொத்தாகும் என்றும், இதில் தனது மகன்களான 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ கிடையாது என்றும், மனு சொத்து பொதுக்குடும்ப வருவாயை கொண்டுதான் கிரையம் வாங்கப்பட்டது என்பதை எதிர்மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் பொதுக்குடும்பமாக இல்லை என்றும், தனித்தனி வசித்துவரும் நிலையில் இல்லாத பொதுக்குடும்பத்திற்கு பொதுவான வருவாய் எதுவும் கிடையாது என்றும், மனுதாரர் மனு சொத்திற்கு தென்புறத்தில் ஆஸ்பெட்டாஸ் ஓட்டுவீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு அருகில் குடியிருந்து வருகிறார் என்றும், மனுதாரர் வெளியுலக நடப்பு அறியாதவர் என்றும், அவரது சுயசம்பாத்தியத்தால் தன்னால் பெறப்பட்ட மேற்படி கிரையத்தின் அடிப்படையில் மனு சொத்துக்கு தன் பெயரில் பட்டா ஏற்பட்டிருக்கும் என்று நினைத்திருந்தார் என்றும், நீதிமன்றத்தில் இருந்து இதன் அசல் வழக்கு அழைப்பாணை வந்த பிறகு கணினி சிட்டா எடுத்து பார்த்தபோதுதான், மனுதாரர் கிரையம் பெற்ற மனுச் சொத்துக்கு 3-ம் எதிர்மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விவரம் தனக்கு தெரியவந்தது என்றும், மேற்படி விவரம் அறிந்து மனுதாரர் வருவாய்த்துறை மூலம் தனது பெயருக்கு பட்டா மாறுதல் கோரி நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளார் என்றும், 3-ம் எதிர்மனதாரர் பெயரில் மனு சொத்திற்கு பட்டா ஏற்பட்டிருந்தாலும் 3-ம் எதிர்மனுதாரருக்கு அதில் எவ்விதமான அனுபோகமோ, பாத்தியமோ கிடையாது என்றும், 3-ம் எதிர்மனுதாரர் தனது பெயரில் உள்ள பட்டாவை பொறுத்து மனு சொத்தில் உரிமை கோரவில்லை என்றும், மனு சொத்தை கிரையம் பெற்ற காலம் முதல் நாளது தேதிவரை விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 15.06.2020-ம் தேதியன்று மழை பெய்ததையடுத்து நிலத்தை உழுவதற்காக வயலுக்கு சென்றிருந்தபோது எதிர்மனுதாரர்கள் இருவரும் இனிமேல் வயலை நீ உழுகக்கூடாது என்று தன்னை தடுத்து தன்னிடம் தகராறு செய்தார்கள் என்றும், தாம் அவர்களை சமாளித்து மனு சொத்தை உழுதுவிட்டார் என்றும், அதன்பின்னிட்டும் 1, 2 எதிர்மனுதாரர்கள் இனிமேல் வயலை தன்னை அனுபவிக்க

விடப்போவதில்லை என மிரட்டி சத்தம்போட்டு விட்டு சென்றுவிட்டார்கள் என்றும், எனவே எதிர்மனுதாரர்களின் செயல்பாட்டை சமூகம் கோர்ட்டார் அவர்களின் உத்தரவினால் மட்டுமே தடுக்க முடியும் என்றும், அதனால் அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்கிட வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், முனநோக்கு வழக்கும், சூழ்நிலை இயைபும் தனக்கு சாதகமாக உள்ளது என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்:-</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனு சொத்துக்கள் இரண்டும் பூஸ்திதியில் ஒரே தாக்காக அடுத்தடுத்து உள்ளது என்றும், மேற்படி இரண்டு இடத்தையும், சேர்த்து அதாவது புலஎண்.9/1 இத்தை பதிவு கிரையமாகவும் புலஎண்.2/7 இடத்தை வாய்மொழியாகவும், இந்த எதிர்மனுதாரர்களின் குடும்ப வருமானத்திலிருந்தும், அதாவது இநத் எதிர்மனுதாரரின் தாயாரின் நகைகளை விற்று அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்தும், தகப்பனார் என்ற முறையில் இந்த மனுதாரர் பெயரில் அதன் முன்பாத்தியஸ்தரான நடேசனிடம் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்களாகும் என்றும், மேற்படி சொத்துக்களில் தென்புறம் சுமார் 64 செண்ட் இடத்தில் மண் அடித்து, அதில் வீடுகட்டி மற்ற இடங்களில் பலவிதமர வகையறாக்களை வைத்து இந்த எதிர்மனுதாரர்களும், மனுதாரும், இந்த எதிர்மனுதாரர்களின் தாயாரும் குடியிருந்து வந்தனர் என்றம், வடபுறம் உள்ள 50 செண்ட் இடத்தினை வயலாக வைத்து மூவரும் பொதுவில் அனுபவித்து வருகின்றனர் என்றும், மேற்படி வயலை இந்த 2-ம் எதிர்மனுதாரர் தான் தற்சமயம் வரை நெல்விவசாயம் செய்து மேற்பார்த்து வருகின்றார் என்றும், தாயார் உயிருடன் இருந்தவரை இந்த மனுதாரர் இடத்தில் இந்த எதிர்மனுதாரர்களுடன் நேரடி பிரச்சனை செய்யாமல் இருந்துவி்டு சொத்தை மட்டும் பிறத்தியில் கிரையம் கொடுக்க ஏற்பாடு செய்ததால் அதை தடுக்க இந்த எதிர்மனுதாரர்கள் இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும், இந்த எதிர்மனுதாரர்களின் தாயார் இறந்தபிறகு மனு சொத்தை இந்த மனுதாரர் மட்டும் அனுபவிப்பதுபோல் பிரஸ்தாபித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கிலும் சரி, இந்த இடைக்கால மனுவிலும் சரி, கோரும் பரிகாரம் என்னவென்றால் தாவா சொத்தினை இந்த மனுதாரர்/1-ம் பிரதிவாதி பிரத்தியில் கிரையம் கொடுக்கக்கூடாது என்றும், மனு

சொத்துக்களில் இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு கூட்டுப்பாத்தியம் உள்ளது என்றும், கட்சி செய்து வருகின்றனர் என்றும், மனு சொத்தினை 2-ம் எதிர்மனுதாரர்தான் உழுது விவசாயம் செய்து வருகின்றார் என்றும், மனுதாரர் ஒருபோதும் விவசாயம் செய்ததே இல்லை என்றும், மனு சொத்திற்கு பட்டா மாறாமல் இதில்கண்ட 2-ம் பிரதிவாதி மாரிமுத்து கோனார் பெயரில் இருப்பதால் மனுதாரரின் தவறான நடவடிக்கைக்கு மேற்டிப 2-ம் பிரதிவாதி உடந்தையாக இருந்து செயல்பட்டு வருகின்றார் என்றும், மனுதாரருக்கு மனு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் மனுவும் Bonafide ஆக இல்லை என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மேற்படி மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**<u>6. பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

இந்த மனுவானது மனுதாரர்/1-ம் பிரதிவாதியால் மனு சொத்தில் மனுதாரர்/1-ம் பிரதிவாதி கொண்டுள்ள அமைதியான அனுபவத்தை 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகளோ, 3-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதியோ அல்லது அவர்களது ஆட்களோ தடை, தகராறு செய்யக்கூடாது என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதியால் தொடரப்பட்டுள்ள தாவாவில் வழக்கிடை பரிகாரமாக பிரதிவாதி நிரந்தர தடையாணை பரிகாரம் கோர முடியுமா என பரிசீலித்து பார்க்கும்போது, மாண்புமிகு கேரள உயர்நீதிமன்றம், **"Vincent And Ors. Vs. Aisumma, AIR 1989 Ker 81",** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"R.2 envisages only application filed by the plaintiffs against the defendants. But Rule 1 contains indications that an order of injunction can be passed either against the defendant or against the plaintiff. Out of the three Clauses in the Rule, the last two refer to orders of injunction passed against defendants, whereas the first Clause (a) does not confine to applications filed by the plaintiffs alone. The words "by any party to the suit" in

the said Clause are sufficient enough to indicate that the legislature intended such orders to be passed even on applications filed by defendants. Support for the above reasoning can be drawn from some of the expressions employed in Rules 2A, 3, 3A and 4 of Order 39 of the Code. Rule 2A deals with consequences of disobedience of the injunction. "The person guilty of such disobedience" is liable to such consequences. It is not necessary that such person should be a defendant. It could as well be a plaintiff. Rule 3 says that before granting an injunction, the Court shall direct notice of the application to be given to "the opposite party". Same expression ("the opposite party") is used in Rule 3A also. If an order of injunction has to be discharged or varied or set aside by the Court, Rule 4 enjoins filing of an application for that purpose "by any party dissatisfied with such order". If the injunction order envisaged in Order 39 could be passed only against defendants, there is no need to use expressions such as those referred to above in the aforesaid Rules. Such expressions have been used to contain the eventually in which even a defendant may have to seek for injunctions against plaintiffs. That apart, there is no prohibition in the Rules under Order 39 against a defendant making an application for injunction. Rules in Order 39 and Order 40 are intended to protect the subject matter of the suit and to safeguard the rights of parties during the pendency of the litigation."

3) இந்த மனுவானது அறந்தாங்கி வட்டம் கண்டிச்சங்காடு கிராமப் புலஎண்.9/1 முழு விஸ்தீர்ணம் 0.11.0 ஏர்ஸ்க்கு தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்/1-ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் ம.சா.ஆ.2-ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.2-ஐ பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரர்/1-ம் பிரதிவாதி பெயருக்கு கடந்த 04.05.1990-ம் தேதி மனு சொத்தான புலஎண்.9/1 நஞ்சை 0.11.0 ஏர்ஸ்க்கு செண்ட் 27 பூறாவும் என்று கண்டு ஏற்பட்டுள்ளது. மனு சொத்தானது நஞ்சை என்றுதான் கண்டு மனுதாரரால் கிரையம் பெறப்பட்டுள்ளதால், மனு சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் இருக்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலித்து பார்க்கும்போது மனுதாரர் தரப்பில் பட்டா, அடங்கல் உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.2-ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள கணினி சிட்டாவில் மனு புலஎண்ணை பொறுத்து ஒரு கருப்பையா கோனாரின் மகன் மாரிமுத்து கோனார் பெயரில் பட்டா எண்.86 படி பதிவு ஏற்பட்டுள்ளது. மேலும் எ.ம.சா.ஆ.3 படி பசலி 1425-க்கு தாவா சொத்தைப் பொறுத்து மாரிமுத்து கோனார் பெயரில் நெல் என்று அடங்கல் பதிவு ஏற்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் 3-ம் எதிர்மனுதாரரான மாரிமுத்து கோனார் பெயரில் தவறாக பட்டா ஏற்பட்டுவிட்டதாக கட்சி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருவாய் ஆவணங்களின் படி மேற்படி மாரிமுத்துகோனார் மனு சொத்தின் சுவாதீனத்தில் இருக்கிறாரா அல்லது மனுதாரர் சுவாதீனத்தில் இருக்கிறாரா

என்பது முழுமையான விசாரணைக்குப் பின்பே தெரிய வரும் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக முதல்தேற்ற வழக்கு ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுதாரருக்கு ஆதரவாக முதல்தேற்ற வழக்கும், சூழ்நிலை இயைபும் ஏற்படாத காரணத்தினால் இம்மனு நிலைநிற்கத்தக்கது இல்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>** : இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| ஆவண எண் | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 06.11.2019 | மனுதாரரின் மனைவி அஞ்சம்மாளின் இறப்பு சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.2 | 04.05.1990 | மனுதாரரால் பெறப்பட்ட கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 22.10.2019 | மனுதாரர் நாகுடி காவல்நிலையத்தில் அளித்த புகார் மனு | கை நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.4 | 24.06.2020 | சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.117/1990 காணாமல் போனது தொடர்பாக நாகுடி காவல் நிலையத்தில் ஆன்லைன் மூலமாக புகார் அளித்ததற்கான ஆன்லைன் ரசீது | கணினி நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| ஆவண எண் | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 04.05.1990 | பதிவுக்கிரையப்பதிரம் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | | கணினி சிட்டா | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 18.12.2018 | 1425-ம் பசலிக்கான அடங்கல் | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 30.11.2018 | 1-ம் வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ரசீது | அலுவலக நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 03.12.2018 | மேற்படி அறிவிப்பை 3-ம் பிரதிவாதி பெற்றதற்கான ஒப்புதல் அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | 19.12.2018 | புலஎண்.9-க்கான புலப்படம் | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.7 | 22.03.2018 | வீட்டுவரி ரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.8 | 14.12.2017 | மின்கட்டண ரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | 14.11.2022 | 1432-ம் பசலிக்கான அடங்கல் | சான்றிட்ட நகல் |

**//உண்மை நகல்//**

V SIVAGAMASUNDARY

Digitally signed by V SIVAGAMASUNDARY
Date: 2023.02.27 17:37:03 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**அறந்தாங்கி.**

வரைவு / செவ்வை உத்தரவு

I.A. No. 118/2020

O.S.No.3/2019

நாள் 27.02.2023.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

அறந்தாங்கி.